**ஆகஸ்ட் – 12**

# TNPSC துளிகள்


- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), பீகாரிலிருந்து புவிசார் குறியீடு பெற்ற மிதிலா மக்கானாவை ஆஸ்திரேலியாவிற்கு கடல் வழியாக முதல் முறையாக வணிக ரீதியாக ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது.
  - 2022 ஆம் ஆண்டில் புவிசார் குறியீட்டைப் (GI) பெற்ற, பீகாரின் மிதிலா பகுதியில் முக்கியமாக உற்பத்தி செய்யப்படுகின்ற மிதிலா மக்கானா என்பது நீர்வாழ் தாமரை விதை (Fox nut) ஆகும்.
- 11வது பிரிக்ஸ் கலாச்சார அமைச்சர்கள் கூட்டம் மத்தியப் பிரதேசத்தின் போபாலில், போபால் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் முடிவடைந்தது.
  - போபால் பிரகடனமானது, கலாச்சாரம் மற்றும் ஆக்கப்பூர்வமான துறைகளில் பிரிக்ஸ் நாடுகளின் பொதுவான அர்ப்பணிப்புகளைப் பதிவு செய்கிறது.
- இந்தியாவில் கடல்சார் நிர்வாகத்தை டிஜிட்டல் மயமாக்குவதற்காக 'மின்னணு-சமுத்ரா' (E-Samudra) டிஜிட்டல் தளம் மும்பையில் தொடங்கப்பட்டது.
  - இது 72க்கும் மேற்பட்ட சேவைகளை ஒருங்கிணைத்து, மாலுமிகள், கப்பல் நிறுவனங்கள் மற்றும் துறைமுகங்களுக்கான ஒற்றை டிஜிட்டல் சாளரமாகச் செயல்படுகிறது.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை - தேசிய தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSIR-NBRI) முதல் சுற்றுச்சூழல் கல்வி மையமான 'பிரகிருதி ஞான் தாம்' (Prakriti Gyan Dham), உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் திறக்கப்பட்டது.
  - பல்லுயிர் தன்மை பாதுகாப்பு, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் இந்தியாவின் தாவரவியல் பாரம்பரியம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக பந்த்ராவில் உள்ள மகரிஷி பராஷர் உயிர்வள மையத்தில் இது உருவாக்கப்பட்டது.
- மேகாலயாவின் ரி போயிக் மாவட்டத்தில் உள்ள ஜிராங்கில் 'ருசுலா கிரிசோபுர்புராடா' (Russula griseopurpurata) என்ற புதிய காளான் இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு போதைப் பொருள் தடுப்புச் சிறப்புப் படை

- மாநிலம் முழுவதும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கையை வலுப்படுத்துவதற்காக தமிழ்நாடு ₹264 கோடியில் போதைப்பொருள் தடுப்புச் சிறப்புப் படையை (ANTF) உருவாக்கியுள்ளது.
- தமிழ்நாடு முழுவதும் காவல்துறை ஆய்வாளர்கள் தலைமையிலான பிரத்யேக காவல் நிலையங்களுடன் 65 ANTF பிரிவுகள் நிறுவப்படும்.
- இப்படையானது கூடுதல் காவல்துறை இயக்குநர் (ADGP) அந்தஸ்துள்ள அதிகாரியின் தலைமையில் செயல்படும். மேலும், இதில் நுண்ணறிவு, இணைய கண்காணிப்பு, நிதி விசாரணை மற்றும் வழக்குத் தொடரும் குழுக்கள் இடம்பெற்றிருக்கும்.
- மாநில அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் உளவுத்துறைப் பகிர்வுக்காக சென்னையில் உள்ள ANTF தலைமையகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை ஒன்று நிறுவப்படும்.

- விழிப்புணர்வு, மறுவாழ்வு மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுடன், போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத விற்பனை மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஆகியவற்றில் இப்படை கவனம் செலுத்தும்.




# தேசியச் செய்திகள்

## உச்ச நீதிமன்றத்தின் பாலின உணர்திறன் தீர்ப்பு அறிக்கை




- பாலினப் பாகுபாடுகளை எதிர்த்துப் போராடுவதற்கான 2023 ஆம் ஆண்டின் கையேட்டை மாற்றி, Judgments and Gender: Sensitivity and Compassion in Writing Judgments என்ற அறிக்கையை இந்திய உச்ச நீதிமன்றம் வெளியிட்டது.
- 'வழக்குத் தொடுப்பவர்' (prosecutrix) என்ற வார்த்தைக்குப் பதிலாக, பாதிக்கப்பட்டவர், தப்பியவர் அல்லது புகார்தாரர் போன்ற நடுநிலையான சொற்களைப் பயன்படுத்த

இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

- அறநெறி சார்ந்த மொழி, பாதிக்கப்பட்டவரைக் குறை கூறுதல் மற்றும் தப்பியவரின் கடந்த கால பாலியல் வரலாறு குறித்த தேவையற்ற கேள்விகளைத் தவிர்க்குமாறு நீதிமன்றங்களை இது கேட்டுக் கொள்கிறது.
- மன அதிர்வு குறித்த விழிப்புணர்வுடன் கூடிய அணுகுமுறை, சாட்சிகளை மரியாதையுடன் நடத்துதல் மற்றும் தப்பியவர்களின் கண்ணியம் மற்றும் தனியுரிமையைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இது பரிந்துரைக்கிறது.
- அனைவரையும் உள்ளடக்கிய நீதித்துறை மொழிக்கான 'பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், வெளிப்பாடு மற்றும் பாலினப் பண்புகள்' (SOGIESC) கட்டமைப்பையும் இது ஊக்குவிக்கிறது.


## டிஜிட்டல் கைது மோசடிகள் மீதான விதிகள்




- அதிகரித்து வரும் டிஜிட்டல் கைது மோசடிகளைக் கையாள்வதற்காக, இடைத்தரகர் கணக்குகளுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOPs) வகுக்குமாறு இந்திய ரிசர்வ் வங்கிக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், நாடு முழுவதும் இ-ஜீரோ முதல் தகவல் அறிக்கைகள் (e-Zero FIRs) மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுக் கட்டமைப்புகளை நடைமுறைப்படுத்தவும் உத்தரவிட்டது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையம் (I4C) சமர்ப்பித்த நான்காவது நிலை அறிக்கையைப் பரிசீலித்த பின்னரே இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தது.
- மேலும், டிஜிட்டல் கைது மோசடிகளுக்குப் பலியாகும் மக்களுக்காக, பகிரப்பட்ட பொறுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுக் கட்டமைப்பை அறிமுகப் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு மத்திய அரசிடம் அது கேட்டுக் கொண்டது.

- அதன் முக்கிய உத்தரவுகளில், சைபர் மோசடி மூலம் கிடைக்கும் பணத்தை சட்ட விரோதமாக மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் இடைத்தரகர் வங்கிக் கணக்குகளைக் கையாள்வதற்கான ஒரு நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) நான்கு வாரங்களுக்குள் வகுக்குமாறு இந்திய ரிசர்வ் வங்கியை (RBI) நீதிமன்றம் கேட்டுக் கொண்டது.

## 50 லட்சம் வீட்டுக்கூரை சூரியசக்தி அமைப்புகள்




- 'பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்த் பிஜ்லி யோஜனா' திட்டத்தின் கீழ் பயன்பெறும் இந்தியக் குடும்பங்களின் எண்ணிக்கை 50 லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி தெரிவித்து உள்ளார்.
- வீட்டுக் கூரைகளில் சூரியமின் தகடுகளை அமைப்பதை ஊக்குவிப்பதன் மூலம் குடும்பங்களுக்கு இலவச மின்சாரத்தை வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வீட்டுக் கூரைகளில் சூரியமின் தகடுகளை அமைக்கும் குடும்பங்களுக்கு, மாதம் 300 யூனிட் வரை இலவச மின்சாரம் மற்றும் ₹78,000 வரை நேரடி நிதியுதவி ஆகியவற்றை வழங்குவதை இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் 2027 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று நிறைவடைகிறது.
- இது உலகின் மிகப்பெரிய வீட்டுக்கூரை சூரியமின் உற்பத்தித் திட்டமாகும்.
- இது 2024-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் ஒரு மத்தியத் துறைத் திட்டமாகும்.
- கடந்த பத்தாண்டுகளில் இந்தியா 300 ஜிகாவாட்டிற்கும் (GW) அதிகமான புதைபடிவ எரிபொருள் சாராத மின் உற்பத்தித் திறனைச் சேர்த்துள்ளது.
- 2030-ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் என்ற இலக்கை அடைவதற்கான பாதையில்

இந்தியா உறுதியாகச் சென்று கொண்டிருக்கிறது.

- ஜூன் 30 நிலவரப்படி, இந்தியாவின் நிறுவப்பட்ட சூரியமின் உற்பத்தித் திறன் 162.15 ஜிகாவாட்டாக இருந்தது.
- இதில் 125.6 ஜிகாவாட் அளவிலான பெரிய அளவிலான திட்டங்கள் (utility-scale projects), 30.11 ஜிகாவாட் அளவிலான வீட்டுக்கூரைத் திட்டங்கள் மற்றும் 6.43 ஜிகாவாட் அளவிலான மின்-கட்டமைப்பு சாராத திட்டங்கள் ஆகியவை அடங்கும்.
- இந்தியா உலகின் இரண்டாவது மிகப்பெரிய எஃகு உற்பத்தியாளராகத் திகழ்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## பிறப்புரிமைக் குடியுரிமை - அமெரிக்கா




- அமெரிக்காவில் பிறப்புரிமைக் குடியுரிமையைக் கட்டுப்படுத்துவதற்காக, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று இரண்டு நிர்வாக உத்தரவுகளில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டார்.
- கர்ப்பிணியான வெளிநாட்டினர் தங்கள் குழந்தைகளுக்கு அமெரிக்கக் குடியுரிமை கிடைப்பதற்காக, அங்கு சென்று பிரசவிப்பதை நோக்கமாகக் கொண்ட "பிறப்பு சுற்றுலா" (birth tourism) என்பதை இந்த உத்தரவுகள் குறிவைக்கின்றன.
- வெளிநாட்டு அரசு ஊழியர்கள் மற்றும் அந்நிய நாட்டு எதிரிகள் என வகைப்படுத்தப்பட்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கான குடியுரிமை உரிமைகளைக் கட்டுப்படுத்தவும் இவை முற்படுகின்றன.
- பிறப்புரிமைக் குடியுரிமையைக் கட்டுப்படுத்தும் டிரம்பின் முந்தைய முயற்சியை நிராகரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் 2026 ஆம் ஆண்டு ஜூன் 30 அன்றைய 6–3


என்ற தீர்ப்பைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- பிறப்புரிமைக் குடியுரிமையானது 14வது சட்டத்திருத்தத்துடன் தொடர்புடையது; அதன் குடியுரிமைப் பிரிவானது, அமெரிக்காவில் பிறந்த அல்லது இயல்புரிமை பெற்ற மற்றும் அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட நபர்களுக்குக் குடியுரிமையை வழங்குகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் முதல் மீன் அகற்றும் திட்டம்


- பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கமானது (BNHS), இந்தியாவின் முதல் மீனவர்களால் வழிநடத்தப்படும் ஆக்கிரமிப்பு மீன்களை அகற்றும் மற்றும் உள்நாட்டு மீன் இனங்களை மீட்டெடுக்கும் திட்டத்தை மகாராஷ்டிராவின் உஜானி நீர்த்தேக்கத்தில் தொடங்கியுள்ளது.
- இத்திட்டமானது ஆக்கிரமிப்பு இனங்களான உறிஞ்சுவாய் கெளுத்தி, திலேப்பியா மற்றும் ஆப்பிரிக்கக் கெளுத்தி ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்த அந்நிய மீன்கள் உள்நாட்டு மீன்களின் பல்லுயிர்த் தன்மையையும் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதித்துள்ளன.
- ஆக்கிரமிப்பு மீன்களை அகற்றுவது மற்றும் நீர்த்தேக்கத்தில் உள்நாட்டு மீன் இனங்களை மீட்டெடுப்பது ஆகியவை இம்முயற்சியில் அடங்கும்.





## வங்காள விரிகுடாவில் ஓசோன் முரண்பாடு

- வடக்கு வங்காள விரிகுடாவிற்கு மேல் 21-23 கி.மீ உயரத்தில் வழக்கத்திற்கு மாறாக ஒரு தடிமனான ஓசோன் படலத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கிழக்கு இந்தியாவின் மீது ஓசோன் செறிவானது இயல்பை விட அதிகமாக இருந்ததுடன், அந்தப் படலம் 24 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்திருந்தது.
- நைனிடாலில் உள்ள ஆரியபட்டா கண்காணிப்பு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் (ARIES) மற்றும் பிற இந்திய நிறுவனங்களைச் சேர்ந்த அறிவியலாளர்கள், முதல் கட்ட NetRAD-ASMA பிரச்சாரத்தின் கீழ் இந்த நிகழ்வை ஆய்வு செய்தனர்.
- இந்த ஆய்வில் 206.5 மெகா ஹெர்ட்ஸ் அடுக்குமண்டல- அடிவளிமண்டல (ST) ரேடார்கள், வானிலை பலூன்கள், செயற்கைக்கோள்கள் மற்றும் வளிமண்டல மாதிரிகள் பயன்படுத்தப்பட்டன.

- கீழ் அடுக்குமண்டலத்தில் தொடர்ச்சியான கீழ்நோக்கிய காற்று இயக்கம் மற்றும் ஓசோன் நிறைந்த காற்றின் இடமாற்றம் ஆகியவற்றை கண்காணிப்புகள் காட்டுகின்றன.
- கிடைமட்டமான ஓசோன் இடமாற்றம், கீழ்நோக்கிய இயக்கம் மற்றும் காற்றின் சுருக்கம் ஆகியவை இந்த அசாதாரண ஓசோன் அதிகரிப்புக்கு முக்கியக் காரணம் என்று அறிவியலாளர்கள் முடிவு செய்துள்ளனர்.




## உலகளாவியப் பெருங்கடல் வெப்பநிலை – 2026 ஜூலை




- துருவப் பகுதிகளுக்கு வெளியே உள்ள உலகளாவிய கடல் மேற்பரப்பு வெப்ப நிலை ஆனது (SST) 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சாதனை அளவை எட்டியது.
- 60° வடக்கு மற்றும் 60° தெற்கு ஆகியவற்றுக்கு இடையேயான சராசரி கடல் மேற்பரப்பு வெப்பநிலை 20.96°C ஆக இருந்ததோடு இது 2023 ஆம் ஆண்டில் ஜூலை மாத முந்தைய சாதனையான 20.89°C ஐ முறியடித்தது.
- பூமத்திய ரேகை பசிபிக் பெருங்கடலில் எல் நினோ நிலைகள் வேகமாக வலுவடைந்து வருவதுடன், அதிக பெருங்கடல் வெப்பநிலைக்கு பங்களிக்கின்றன.

- 16.90°C சராசரி மேற்பரப்பு காற்று வெப்பநிலையுடன், 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதமானது உலக அளவில் இரண்டாவது வெப்பமான மாதமாக அமைந்தது.
- மேற்கு ஐரோப்பா அதன் வெப்பமான ஜூன்-ஜூலை காலகட்டத்தை வெப்ப அலைகள், வறண்ட நிலைகள் மற்றும் காட்டுத்தீயுடன் பதிவு செய்தது.
- மேற்கு ஐரோப்பா மிகக் குறைந்த மேற்பரப்பு மண்ணின் ஈரப்பதத்தையும் பதிவு செய்தது. அதேவேளையில், கனடா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் தென் அமெரிக்காவின் சில பகுதிகளை வறண்ட காலநிலைகள் பாதித்தன.

## படைச்சிறுத்தை மீதான மேகாலயாவின் பாதுகாப்புத் திட்டம்





- மேகாலயா மாநில முதலமைச்சர் கான்ராட் கே. சங்மா, படைச்சிறுத்தை பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மாநில விலங்கான படைச்சிறுத்தையைப் (நியோஃபெலிஸ் நெபுலோசா) பாதுகாப்பதே இதன் நோக்கம்.
- இது போர்னியோ மற்றும் சுமாத்ரா தீவுகளில் காணப்படும் சுண்டா படைச் சிறுத்தையிலிருந்து வேறுபட்டது.
- படைச்சிறுத்தையானது, பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் "எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்" எனப் பட்டியலிடப் பட்டு உள்ளது.
- மேலும் இது, 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I-இன் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- பூடான், மியான்மர், தாய்லாந்து, தீபகற்ப மலேசியா மற்றும் வடகிழக்கு இந்தியாவின் சில பகுதிகள் இதன் உலகளாவிய வாழிடங்களில் அடங்கும்.
- இதற்கு மாறாக, வங்கதேசம், வியட்நாம் மற்றும் சீனாவின் பெரும் பகுதிகளில் இதன் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்துள்ளது.
- சிங்கப்பூர் மற்றும் தைவானில் இது உள்ளூரில் அழிந்துவிட்டது.

- இந்தியாவில், இது சிக்கிம், வடக்கு மேற்கு வங்காளம், திரிபுரா, மிசோரம், மணிப்பூர், அசாம், நாகாலாந்து மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், மேகாலயாவின் மிதவெப்பமண்டல காடுகளிலும் காணப்படுகிறது.

# மாநிலச் செய்திகள்

## லடாக்கின் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027

- லடாக் தனது 2027 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 அன்று தொடங்கும். மேலும், சாதி விவரங்களைப் பதிவு செய்யும் முதல் பகுதிகளில் இதுவும் ஒன்றாக இருக்கும்.
- பதிலளிப்பவர்கள் தங்கள் சாதியைக் கூறுவதற்கான திறந்தநிலை நெடுவரிசை உட்பட, கணக்கெடுப்புப் படிவத்தில் சுமார் 40 கேள்விகள் இருக்க வாய்ப்புள்ளது.
- 'உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டின்' (LAC) பகுதிக்கு அருகிலுள்ள பாதுகாப்பு அமைப்புகளைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக 'புவிசார் குறியிடல்' செய்ய முடியாது என்பதால், லடாக்கின் சில பகுதிகளில் காகித அடிப்படையிலான படிவங்கள் பயன்படுத்தப்படும்.
- ஆகஸ்ட் 17 முதல் 31 வரை சுய கணக்கெடுப்பும், அதைத் தொடர்ந்து வீடு வீடாக மக்கள் தொகை கணக்கெடுப்பும் நடைபெறும்.
- பதிலளிப்பவர் அறிவிக்கும் சாதிப் பெயரைப் பதிவு செய்வதன் மூலம் சாதித் தரவு சேகரிக்கப்படும்.
- லடாக், ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் ஆகிய பனி மூடிய பகுதிகள், இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு முன்னதாகவே கணக்கெடுப்பை நடத்தும்.





# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## டிராக் பதக்கம் 2026

- கோட்பாட்டு இயற்பியலில் வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றான 2026 ஆம் ஆண்டிற்கான டிராக் பதக்கத்தின் (Dirac Medal) இணை-பெறுநராக இந்திய இயற்பியலாளர் தீபக் தர் அறிவிக்கப்பட்டுள்ளார்.
- இப்பதக்கமானது இத்தாலியில் உள்ள அப்துஸ் சலாம் கோட்பாட்டு இயற்பியலுக்கான சர்வதேச மையத்தால் (ICTP) 1985 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.


- 2022 ஆம் ஆண்டில் போல்ட்ஸ்மேன் பதக்கத்தைப் (Boltzmann Medal) பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையை தீபக் தர் பெற்றார்.
- அவர் இப்போது டிராக் மற்றும் போல்ட்ஸ்மேன் ஆகிய இரண்டு பதக்கங்களையும் பெற்ற 10 பேரில் ஒருவராக உள்ளார்.
- எளிமையான தொடர்புகள் எவ்வாறு பெரிய அமைப்புகளில் சிக்கலான நடத்தையை உருவாக்கும் என்பதை இவரது ஆராய்ச்சி கண்டறிகிறது.




## ஏ. எஸ். ராஜீவ் - பொறுப்பு வகிக்கும் மத்திய விழிப்புணர்வு ஆணையர்

- மத்திய விழிப்புணர்வு ஆணையராக (CVC) செயல்பட, விழிப்புணர்வு ஆணையர் ஏ. எஸ். ராஜீவ் அவர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார்.
- பதவிக்காலம் நிறைவடைந்த பிரவீன் குமார் ஸ்ரீவாஸ்தவாவிற்குப் பிறகு இவர் இப்பொறுப்பை ஏற்றுள்ளார்.
- பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் கீழ் உள்ள பணியாளர் மற்றும் பயிற்சித் துறையால் (DoPT) இது குறித்த அறிவிப்பு வெளியிடப் பட்டது.
- இந்திய அரசின் தீர்மானத்தின் மூலம், 1964 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 அன்று மத்திய விழிப்புணர்வு ஆணையம் (CVC) ஒரு நிர்வாக அமைப்பாக நிறுவப்பட்டது.
- கே. சந்தானம் தலைமையிலான ஊழல் தடுப்புக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இது அமைக்கப்பட்டது.
- அரசுத் துறைகளில் நிலவும் ஊழலைக் கையாள்வதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2003ம் ஆண்டில், நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின் மூலம் CVC-க்குச் சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டதோடு இது எந்தவொரு நிர்வாக அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டிற்கும் உட்படாத ஒரு தன்னாட்சி அமைப்பாகச் செயல்படுகிறது.

- இந்திய மத்திய அரசின் கீழ் நடைபெறும் அனைத்து விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் கண்காணிப்பதும், மத்திய அரசு நிறுவனங்களில் விழிப்புணர்வுப் பணிகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், ஆய்வு செய்தல் மற்றும் சீரமைத்தல் ஆகியவற்றில் பல்வேறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதும் இதன் பொறுப்பாகும்.
- CVC ஒரு புலனாய்வு அமைப்பு அல்ல; அரசாங்கத்தின் சிவில் பணிகளை ஆய்வு செய்வது மட்டுமே CVC மேற்கொள்ளும் ஒரே புலனாய்வு நடவடிக்கையாகும்.




## முக்கிய தினங்கள்

### உலக சிங்கங்கள் தினம் 2026 - ஆகஸ்ட் 10

- சிங்கங்களின் பாதுகாப்பு குறித்தும், வாழ்விட இழப்பு, வேட்டையாடுதல் மற்றும் மனித-வனவிலங்கு மோதல் போன்ற அச்சுறுத்தல்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிங்கங்கள் வேட்டையாடும் விலங்குகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழல் அமைப்புகளின் சமநிலையைப் பராமரிக்கவும் உதவும் முதன்மை வேட்டையாடிகளாகும்.
- உலகில் எஞ்சியிருக்கும் காட்டு ஆசிய சிங்கங்களின் தாயகமாக இந்தியா உள்ளது. இவை முக்கியமாக குஜராத்தின் கிர் நிலப்பரப்பில் காணப்படுகின்றன.
- வாழ்விட மேலாண்மை, எண்ணிக்கை கண்காணிப்பு, ஆராய்ச்சி மற்றும் மனித-

வனவிலங்கு மோதல் குறைப்பு ஆகியவற்றின் மூலம் ஆசிய சிங்கங்களைப் பாதுகாப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் இந்தியா சிங்க பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கியது.

❖ சிங்கங்களின் எண்ணிக்கை ஒரே நிலப்பரப்பில் குவிந்திருக்கும் அபாயத்தைக் குறைப்பதற்காக, குஜராத்தில் உள்ள பர்தா வனவிலங்கு சரணாலயம் கூடுதல் வாழ்விடமாக உருவாக்கப்பட்டு வருகிறது.




## இதரச் செய்திகள்

### வெள்ளையனே வெளியேறு இயக்க தினம் 2026


❖ 1942 ஆம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் (பாரத் சோடோ அந்தோலன்) தொடங்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 8 அன்று வெள்ளையனே வெளியேறு இயக்க தினம் அனுசரிக்கப்படுகிறது.

❖ அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் (AICC) அமர்வின் போது, பம்பாயில் (தற்போதைய மும்பை) உள்ள கோவாலியா டேங்க் மைதானத்தில் 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 அன்று இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.

❖ மகாத்மா காந்தி இவ்வியக்கத்திற்குத் தலைமை தாங்கியதுடன் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கக் கோரி, "செய் அல்லது செத்து மடி" என்ற புகழ் பெற்ற அழைப்பை அவர் விடுத்தார்.

❖ இவ்வியக்கம் முக்கியமாக கிரிப்ஸ் தூதுக்குழுவின் (1942) தோல்வி மற்றும் இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக வளர்ந்து வந்த எதிர்ப்பு ஆகியவற்றால் தூண்டப்பட்டது.

- 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று காந்தி மற்றும் பிற காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால் மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பெண்கள் தொடர்ந்து போராட்டங்கள் மற்றும் தலைமறைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
- இவ்வியக்கம் ஆங்கிலேயர்களால் ஒடுக்கப்பட்டாலும், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்ததுடன், 1947 ஆம் ஆண்டில் சுதந்திரத்தை நோக்கிய பாதையை வலுப்படுத்தியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★